## 16.3 ஊராட்சி ஒன்றியப் பொதுநிதியிலுள்ள உபரி நிதியிலிருந்து சாலை உருளைப் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளல்

ஊரக வளர்ச்சித்துறை

அரசாணை (நிலை) எண் 363 நாள் : 22.12.97

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண் 1531, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள் 29.7.76.
2. அரசு ஆணை (நிலை) எண் 310, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள் 8.3.1981.
3. அரசு ஆணை (நிலை) எண் 229, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 15.10.96.
4. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண் 126020/92 நாள் 5.12.94.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாலை உருளை 22.1.1992 முதல் பழுதடைந்து இருப்பதாகவும் இதனை பழுதுபார்க்க ஆகும் மதிப்பீட்டு செலவு ரூ. 1.20 லட்சத்தினை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவு செய்ய திருவண்ணாமலை ஆட்சித்தலைவர் அனுமதி கேட்டுள்ளார். ஆனால் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலுள்ள உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து வெளியிடப்பட்டுள்ள படிக்கப்பட்டவையில் கண்டுள்ள அரசாணைகளில் சாலை உருளை பழுதுபார்க்கும் பணி இடம்பெறவில்லை. ஆகவே ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலுள்ள உபரி நிதியிலிருந்து முன்னுரிமை அளித்து மேற்கொள்ளப்படும் வேலைகளில் சாலை உருளை பழுது பார்க்கும் பணியை சேர்க்கலாம் என்றும், இந்தப்பணியை அனுமதிக்க தனக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசை கேட்டுள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்தது. ஊரக வளர்ச்சி துறையின் 3.1.1997 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 4 ன்படி ஊராட்சி ஒன்றிய பொதுநிதியிலுள்ள உபரி நிதியிலிருந்து ரூ. 5.00 லட்சம் வரை ஊரக வளர்ச்சி துறையின் 15.10.96 நாளிட்ட அரசாணை எண் 229 ல் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமை பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால் அம்முன்னுரிமை பணிகளில் ஒன்றாக ஊராட்சி ஒன்றியங்களின் சாலை உருளை பழுது பார்க்கும் பணியை சேர்த்து ஊராட்சி ஒன்றியங்கள் இப்பணியை செய்ய அனுமதி வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. இந்த ஆணை நிதித்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 94776/ஊரக வளர்ச்சி/97–1, நாள் 2.12.97 ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்